# தலைவா உனை வணங்க

தலைவா உனை வணங்க - என்
தலை மேல் கரம் குவித்தேன்
வரமே உனை கேட்க - நான்
சிரமே தாழ் பணிந்தேன் (2)

அகல் போல் எரியும் உன் அன்பு - அது
பகல் போல் மணம் பரவும் (2)
நிலையாய் உன்னை நினைத்தால்
நான் மலையாய் உயர்வடைவேன் (2)

தலைவா உனை வணங்க - என்
தலை மேல் கரம் குவித்தேன்
வரமே உனை கேட்க - நான்
சிரமே தாழ் பணிந்தேன்

நீர் போல் தூய்மையையும் - என்
நினைவில் ஓடச் செய்யும் (2)
சேற்றினில் நான் விழுந்தால்
என்னை சீக்கிரம் தூக்கிவிடும் (2)

தலைவா உனை வணங்க - என்
தலை மேல் கரம் குவித்தேன்
வரமே உனை கேட்க - நான்
சிரமே தாழ் பணிந்தேன் (2)
நான் சிரமே தாழ் பணிந்தேன்